1975 அக்டோபர் 24]

THE HON. THIRU S. MADHAVAN: (*a*) Yes.

(*b*) It is under the consideration of Government.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினக்கள் 1-ம், 2-ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி * அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2. அறிவிப்புகள்.

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சட்டமன்ற மேலவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விபரம் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவினை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) பேரவையால் நிறைவேற்றப் பட்டு, இது அரசியலமைப்புச் சட்டத்தின் 199 வது பிரிவுப்படி பணச்சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது.

1975 அக்டோபர் 24]

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க் கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன் :—

(1) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1975).

(2) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1975).

(3) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, ஹோமியோபதி முறை மருத்துவம் ஹோமியோபதி மருத்துவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1975).

(4) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1975).

(5) 1975 ஆம் ஆண்டு, மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1975).

(4) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு இரு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களால் மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு விதாச்சார பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம் இரு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியுள்ளது. நேரடி வாக்குப் பதிவு முறை மூலம் தேர்தல் நடைபெறுவதற்கு கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் பெற்றுக் கொள்வதற்கான கடைசி நாளும் நேரமும்	27—10—1975 பிற்பகல் 5 மணி.
வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்தல் ..	27—10—1975 பிற்பகல் 5-30 மணி.
வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும், நேரமும்	28—10—1975 பிற்பகல் 5 மணி.